**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மாற்றுத் திறனாளிகளுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பெட்டிக்கடை வைக்க ரூ.5,000/– அரசு மான்யமாக வழங்குதல் – 2010–2011–ம் ஆண்டுக்கான திட்டத் தொடராணை–ரூ.2.50 இலட்சம் செலவினம் ஒப்பளிப்பு–ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2)த் துறை

அரசு ஆணை(நிலை) எண்.33 நாள்:01–07– 2010

ஆனி 17, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. அரசு ஆணை (நிலை) எண். 75, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 21.5.1999.
2. அரசு ஆணை (நிலை) எண். 115, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 8.9.2009.

மீண்டும் படிக்கப்பட்டது:-

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண். 5422/ஊம.3–1/2010 நாள் 2.6.2010

––––––

**<u>ஆணை</u>**:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ், பெட்டிக்கடை வைக்க ஆகும் மொத்த செலவினத்தில் மூன்றில் ஒரு பங்கு ரூ.5,000/–க்கு மேற்படாமல் வழங்கவும், இத்திட்டத்தின் கீழ் 50 நபர்கள் பயனடையத்தக்க வகையில் ரூ.2.50 இலட்சம் செலவினத்திற்கு ஒப்புதல் அளித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி 2009–2010–ம் ஆண்டு இத்திட்டத்தினை தொடரவும், 50 மாற்றுத் திறனாளிகள் பயனடையத்தக்க வகையில் ரூ.2.50 இலட்சம் ஒதுக்கீடு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் 2010–2011ம் ஆண்டிற்கு இத்திட்டத்தினை தொடரவும் ரூ. 2.50 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமாக பரிசீலித்த பின்னர், மாற்றுத் திறனாளிகளுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பெட்டிக்கடை வைக்க மானியம் வழங்கும் திட்டத்தினை 2010–2011–ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தவும், குறைந்தபட்சம் 50 மாற்றுத் திறனாளிகள் பயனடையத்தக்க வகையில் ரூ.2.50 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவினம் மேற்கொள்ளவும் இத்தொகையை மாற்றுத் திறனாளிகளுக்கு பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

"2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II–மாநிலத் திட்டம்–JV– மாற்றுத் திறனாளிகளுக்கான சுயவேலைவாய்ப்பு–70–வேலை வாய்ப்பின்மை நிவாரணம். "
(த.தொ.கு. 2235–02–101–JV–7009)

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். நிதி (சமூக நலம்)/32630/10, நாள் 29.06.2010–ன்படி அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/9/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

<u>நகல்:-</u>
நிதி (சந) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.